


RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE சனி நவம்பர் 01 * 2025 * மலர் -1 * இதழ்-152 * VOL-1 * ISSUE-152 விலை ரூ.3 * பக்கம் -4



வல்லபாய் பட்டேல் பிறந்த நாளையொட்டி குஜராத்தில் உள்ள அவரது சிலைக்கு பிரதமர் மோடி மலர் தூவி மரியாதை செலுத்தினார்.



வல்லபாய் பட்டேல் பிறந்த நாளை யொட்டி அவரது சிலைக்கு உள்துறை அமைச்சர் அமித்ஷா, ஜனாதிபதி முர்மு ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

### தமிழகத்தில் பீகார் மக்கள் துன்புறுத்தலா?

# பிரதமர் மோடியின் பேச்சுக்கு முதல்வர் ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, நவ.1

தமிழ்நாட்டில் பீகார் மக்கள் துன்புறுத்தப்படுவதாக பிரதமர் மோடி பேசியிருப்பதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். பிரதமர் மோடி அனைவருக்குமானவர் என்பதை மறந்து பேசுவதன் மூலம் அந்தப் பதவிக்கான மாண்பை இழந்துவிடக்கூடாது என்று குறிப்பிட்டுள்ளார்.

பீகாரில் சட்டப்பேரவை தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. வரும் நவம்பர் 6 மற்றும் நவம்பர் 11 ஆகிய நாள்களில் இரண்டு கட்டமாக தேர்தல் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. வரும் நவம்பர் 14ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற இருக்கிறது. முக்கிய தலைவர்கள் தங்களின் தீவிர பரப்புரையை தொடங்கிவிட்ட நிலையில், பீகார் தேர்தல் களம் தற்போது சூடுபிடித்திருக்கிறது.

இந்தநிலையில் பீகாரில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று தேர்தல் பிரசாரம் செய்தார். அப்போது காங்கிரஸ், லல்லு பிரசாத் யாதவ் கட்சிகளை கடுமையாகச் சாடினார். மேலும் தமிழ்நாடு குறித்தக கருத்தையும் தெரிவித்தார்.

அதாவது தமிழ்நாட்டுக்கு வேலைக்கு வந்துள்ள பீகாரைச் சேர்ந்த உழைக்கும் மக்களை தி.மு.க.வினர் துன்புறுத்துவதாக குறிப்பிட்டிருந்தார்.

அவரது இந்தப் பேச்சுக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

இந்த நாட்டிலுள்ள அனைவருக்குமான மாண்புமிகு பிரதமர் பொறுப்பில் இருக்கிறோம் என்பதையே நரேந்திர மோடி அடிக்கடி மறந்து, இது போன்ற பேச்சுகளால் தன்னுடைய பொறுப்புக்குரிய மாண்பை இழந்துவிடக் கூடாது என்று ஒரு தமிழனாக வேதனையுடன் கேட்டுக் கொள்கிறேன்.





ஒடிசா, பீகார் என்று எங்கு சென்றாலும், பாஜகவினர் தமிழர்களின் மீதான வன்மத்தைத் தேர்தல் அரசியலுக்காக வெளிப்படுத்துவதற்குத் தமிழ்நாட்டு மக்களின் முதல்அமைச்சர் என்ற முறையில் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பன்முகத்தன்மை கொண்ட, வேற்றுமையில் ஒற்றுமையைக் காணும் பெருமைமிக்க இந்தியாவில், இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பகையை வளர்ப்பது, தமிழர்களுக்கும் பீகார் மக்களுக்கும் பகை உண்டாக்கும்படி நடந்துகொள்வது போன்ற அற்ப அரசியல் செயல்பாடுகளை நிறுத்திவிட்டு, நாட்டின் நலன் மீது பிரதமரும் பா.ஜ.க.வினரும் கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

ஒடிசாவில் சில ஆண்டுகளுக்கு முன்னர் சட்டசபை தேர்தல் நடந்தது. அப்போது ஒடிசாவின் ஆட்சி அதிகாரத்தை ஒரு தமிழரின் கையில் கொடுக்க அப்போதைய முதல்வர் நவீன் பட்நாயக் திட்டமிட்டு வருவதாக குறிப்பிட்டார்.

மேலும் பூரி ஜெகநாதர் கோவில் சாவியையும் அவரிடம் ஒப்படைத்துவிட்டார் என்றும் தெரிவித்திருந்தார். அப்போதும் மோடியின் பேச்சுக்குதமிழ்நாட்டில் இருந்து கடும் விமர்சனங்கள் எழுந்தன. அப்போதைய முதல்வர் நவீன் பட்நாயக்கின் உதவியாளராக இருந்தவர் ஒரு தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது.

### நத்தம் அருகே நேற்று காலை பரிதாபம்:

# ஆட்டோ மீது அரசு பேருந்து மோதி பெண் பலி!

### 8 மாணவ, மாணவிகள் உள்ளிட்ட 11 பேர் காயம்!!

திண்டுக்கல்,நவ.1–

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகே சமுத்திராபட்டியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகள் நேற்று காலை திண்டுக்கல்லில் பள்ளியில் நடைபெறும் கணித வினாடி வினா போட்டியில் கலந்து கொள்வதற்காக சமுத்திரப்பட்டியில் இருந்து நத்தம் நோக்கி ஆட்டோவில் வந்துள்ளனர்.

ஆட்டோவை பூத குடியைச் சேர்ந்த சந்திரன் (53) என்பவர் ஓட்டி வந்துள்ளார்.12 பேருடன் ஆட்டோ நத்தம் அம்மன் குளம் அருகே வந்து கொண்டிருந்தபோது பின்னால் வந்த அரசு பேருந்து திடீரென ஆட்டோவின் பக்கவாட்டில் பலமாக மோதியது. இதில் ஆட்டோ தூக்கி வீசப்பட்டு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. ஆட்டோவில் பயணம் செய்த சமுத்திராபட்டியைச் சேர்ந்த திவ்ய ஸ்ரீ(17), குகன் (14), சாருமதி (15), மவுனிகா(16), ஹரிணி ஸ்ரீ (15), ரியாராஜ் (13), சம்பைபட்டியை சேர்ந்த பூமிகா (16), சுண்டக்கா பட்டியை சேர்ந்த கோகிலா (17),திருப்பதி, சாகுல் ஹமீது மற்றும் ஆட்டோ ஓட்டுநர் சந்திரன் உள்ளிட்டோர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் மீட்டு நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். பலத்த காயமடைந்த மேலூர் அருகே சின்ன கற்பூரம் பட்டியைச் சேர்ந்த நல்லியப்பன் மனைவி நைனம்மாள் (43) என்பவர் சிகிச்சை பலனின்றி உயிர் இழந்தார். இறந்தவரின் உடல் உடற்கூறு ஆய்வுக்காக நத்தம் அரசு மருத்துவமனையில் நத்தம் அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்தில் சிக்கி தலையில் காயமடைந்த திவ்ய ஸ்ரீ, குகன் ஆகிய இருவரையும் மேல்சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.





ஊழல் தடுப்பு குறித்து விழிப்புணர்வு பேரணி மற்றும் விழிப்புணர்வு குறித்து மின்னணு வாகனத்தை மாவட்ட ஆட்சியர் சிவசௌந்திரவல்லி கொடி அசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் துறை சார்ந்த அரசு அலுவலர்கள், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் புண்ணியகோட்டி, பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.

### கழுத்தில் பந்து தாக்கியதால்

# ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் சாவு!

மெல்போர்ன், நவ.1



ஆஸ்திரேலியாவில் கிளப் கிரிக்கெட்டில் விளையாடி வந்த 17 வயது வீரர் பயிற்சியின் போது வேகப்பந்து பின்கழுத்து மற்றும் தலைப்பகுதியில் பட்டதில் உயிரிழந்தார்.

விக்டோரியா மாகாணத்தின் ஃபெர்ன்ட்ரீ கல்லி கிரிக்கெட் கிளப்புக்காக விளையாடி வந்த பென் ஆஸ்டின் என்ற அந்த வீரர் டி–20 போட்டிக்காக கடந்த செவ்வாய்க்கிழமை வலைபயிற்சியில் ஈடுபட்டிருந்தார். அப்போது சக வீரர் சைடு ஆர்ம் கருவி கொண்டு பென் ஆஸ்டினுக்கு பந்து வீசினார். எதிர்பாராதவிதமாக அந்தப் பந்து ஆஸ்டினின் பின்கழுத்து மற்றும் தலைப்பகுதியில் பட்டது. ஆஸ்டின் தலைகவசம் அணிந்திருந்தபோதும் கழுத்துப் பகுதியை பாதுகாக்கும் பட்டை அதில் இல்லாததால் அங்கு அவருக்கு காயம் ஏற்பட்டது. இதில் நிலைகுலைந்த அவர், உயிருக்கு ஆபத்தான நிலையில் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும் அவர் சிகிச்சைப் பலனின்றி வியாழக்கிழமை உயிரிழந்தார். இந்தத்துயரச்சம்பவம் கிரிக்கெட் வட்டாரத்தில் கவலையை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 2014–ல் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் பிலிப் ஹியூஸ் (25) முதல் தர கிரிக்கெட் போட்டியின் போது இதேபோல் வேகப்பந்து தலையில் பட்டு இரு நாள்களுக்குப் பிறகு உயிரிழந்தது நினைவுகூரத்தக்கது. அப்போதிருந்து சர்வதேச கிரிக்கெட் மட்டுமல்லாமல், அனைத்து விதமான போட்டிகளிலும் தலைக்கவசம் கட்டாயமாக்கப்பட்டது.

### 10, 12ஆம் வகுப்புகளுக்கு

# பிப்.17-ல் பொதுத் தேர்வு தொடக்கம்!

### சி.பி.எஸ்.இ. அறிவிப்பு!!

புதுடெல்லி, நவ.1

10 மற்றும் 12ஆம் வகுப்புகளுக்கான பொதுத்தேர்வு 2026, பிப்.17ஆம் தேதி தொடங்கவுள்ளதாக மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (சிபிஎஸ்இ) தெரிவித்தது.

மேலும் 10ஆம் வகுப்புத் தேர்வுகள் மார்ச் 10ஆம் தேதியும் 12ஆம் வகுப்புத் தேர்வுகள் ஏப்.9ஆம் தேதியும் நிறைவடையவுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டது.இதுகுறித்து தேர்வுக் கட்டுப்பாட்டாளர் சான்யம் பரத்வாஜ் கூறுகையில், 'மாணவர்கள் நன்கு தயாராகும் வகையில் இரு தேர்வுகளுக்கு இடையே போதுமான இடைவெளி அளிக்கப்பட்டுள்ளது. 12–ஆம் வகுப்பை நிறைவுசெய்யும்மாணவர்கள்உயர்கல்விநிறுவனங்களில் சேர்வதற்காக நடத்தப்படும் நுழைவுத் தேர்வுகளை கருத்தில்கொண்டு அதற்கு முன்பாகவே பொதுத் தேர்வுகளை முடித்துக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.இதனால் மாணவர்கள் பொதுத் தேர்வு மற்றும் நுழைவுத் தேர்வு என இரு தேர்வுகளுக்கும் தயாராவதில் சிரமங்கள் இருக்காது' என்றார்.

## இயற்கை அழகு காட்சிகள்



காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால் தர்மபுரி மாவட்டம், ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து குறைந்தது. இதனால் சுற்றுலா பயணிகள் மெயின் அருவியில் குளித்தும், பரிசல் பயணம் செய்தும் மகிழ்ச்சி அடைந்தனர்.



அலங்காநல்லூர் அருகே சின்ன ஊர்சேரி கிராமத்தில் உள்ள ஒரு தோட்டத்தில் வாழை நடப்பட்டுள்ளது. ஊடுபயிராக கடலை செடிகளும் வளர்ந்துள்ளன.



தூத்துக்குடி மாவட்டம், அத்திமரப்பட்டியில் பிசான சாகுபடிக்காக தங்களின் நிலங்களை மாடுகளை பூட்டி, மரமடித்து சமன் படுத்தும் பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.



# தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம்!

தருமபுரி,நவ.1

தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் மாவட்ட கட்சி அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. முன்னாள் மாவட்ட செயலாளர்கள் தடங்கம் சுப்பிரமணி, தர்மச்செல்வன், இன்பசேகரன், மாவட்ட துணை செயலாளர்கள் உமாசங்கர், ஆறுமுகம், மாவட்ட பொருளாளர் தங்கமணி, பொதுக்குழு உறுப்பினர்கள் சரஸ்வதி துரைசாமி, ஏலகிரி நடராஜ், சோலை மணி, வேலுமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர செயலாளர் நாட்டான் மாது வரவேற்றார். கூட்டத்தில் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆ. மணி எம்.பி. ,தொகுதி பார்வையாளர் செங்குட்டவன்,பாரி ஆகியோர் கலந்து கொண்டு தீர்மானங்கள் குறித்து விளக்கிப் பேசினர்கள்.

இந்தக் கூட்டத்தில் சென்னை மகாபலிபுரத்தில் நடைபெற்ற "என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி" பயிற்சி கூட்டத்தில் முதல்அமைச்சரின் ஆலோசனைகள் குறித்தும், வாக்காளர் பட்டியலில் தீவிர சிறப்பு திருத்தம் தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது. வருகிற 3ம் தேதி தருமபுரி ஜோதி மகாலில் நடைபெறும் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வக்கீல் ஆ. மணி எம்.பி. மகன் திருமண விழாவிற்கு வருகை தரும் தமிழக முதல்அமைச்சருக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ. வேடம்மாள், ஒன்றிய செயலாளர்கள் சண்முகம், பெரியண்ணன், வைகுந்தம், காவேரி, கருணாநிதி, வீரமணி, பச்சையப்பன், செல்வராஜ், மல்லமுத்து, கிருஷ்ணன், சக்திவேல், சந்திரமோகன், தென்னரசு, அரூர் நகர செயலாளர் முல்லைரவி, அரூர் நகராட்சி தலைவர் சூர்யாதனபால், பேரூராட்சி செயலாளர்கள் வீரமணி, சண்முகம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அசோக்குமார்கோவிந்தன்,மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் பொன் மகேஸ்வரன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். முடிவில் தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கெவுதம் நன்றி கூறினார்.

# பூக்கள் இல்லாததால் வெறிச்சோடி காணப்படும் கொடைக்கானல் பிரையண்ட் பூங்கா!

கொடைக்கானல்,நவ.1

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் சர்வதேச சுற்றுலா தலங்களில் ஒன்றாக இருந்து வரும் நிலையில் கொடைக்கானலுக்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் வருவது வழக்கமான ஒன்றாகும் இந்த நிலையில் கொடைக்கானல் வரும் சுற்றுலா பயணிகள் அனைவரும் கண்டு ரசிக்கக்கூடிய முக்கிய சுற்றுலா தலங்களில் ஒன்றாக பிரையண்ட் பூங்கா இருந்து வருகிறது இந்த நிலையில் கடந்த சில நாட்களாக பெய்த மழையில் பிரையண்ட் பூங்காவில் செடிகளில் உள்ள பூக்கள் அனைத்தும் உதிர்ந்தநிலையில்வெறும் செடிகளாக மட்டுமே காட்சியளித்து வருகிறது



மேலும் பிரையண்ட் பூங்காவின் உள்ளே செல்வதற்கு 50 ரூபாய் நுழைவு கட்டணமாக பெறப்பட்டு சுற்றுலாப் பயணிகள் உள்ளே சென்று பார்க்கும் போது மலர்கள் எதுவும் இல்லாத காரணத்தால் ஏமாற்றத்துடன் திரும்பி வரும் சூழல் ஏற்பட்டு வருகிறது.



# ராஜபாளையத்தில் முதல்வருக்கு தி.மு.க.வினர் வரவேற்பு!

தென்காசி,நவ.1

ராஜபாளையம் தென்காசியில் இருந்து சாலை மார்க்கமாக மதுரை சென்ற தமிழக முதல்வர் மு க ஸ்டாலினுக்கு ராஜபாளை யத்தில் திமுக வினர் வரவேற்பு அளித்தனர். தென்காசி யில் நடந்த அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்ட தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின்சாலை மார்க்கமாக ராஜபாளையம் வழியாக மதுரை சென்றார்.

நேற்று இரவு ராஜபாளையத்தில் சாலையின் இரு புறங்களிலும் திரண்டிருந்த திமுக நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் முதல்வர் மு.க ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

மாவட்ட ஆட்சியர் சுகபுத்ரா புத்தகம் வழங்கி முதல்வரை வரவேற்றார். தொடர்ந்து எம்எல்ஏ தங்கபாண்டியன், எம்பி ராணி ஸ்ரீகுமார், நகராட்சி தலைவர் பவித்ரா ஷியாம், சீர்மரபினர் நல வாரிய துணைத்த லைவர் ராசா அருண்மொழி, முன்னாள் எம்எல்ஏ வி.பி.ராஜன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் சால்வை கொடுத்து முதல்வருக்கு வரவேற்பு அளித்தனர்.



# வெண்மனம்புதூர் ஸ்ரீ கடம்பவன முருகன் கோவில் சூரசம்ஹாரம் (ம) திருக்கல்யாணம்!

திருவள்ளூர், நவ.1

திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் லட்சுமி அம்மன் நகர் வெண்மனம் புதூரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ கடம்பவன முருகன் திருக்கோவிலில் திங்கட்கிழமையன்று கந்த சஷ்டி பெருவிழா (ம) சூர சம்ஹாரம் (ம) ஸ்ரீ தெய்வானை கடம்பவன முருகன் திருக்கல்யாணம் வைபவம் கோலாகலமாக நடைபெற்றது. திங்கட்கிழமை அன்று சூரனை முருகன் வதம் செய்யும் சூரசம்ஹார விழாவின் முக்கிய நோக்கம் பார்வதி அன்னை (தாயார்) தன்னுடைய மகன் முருகப் பெருமானுக்கு தன்னுடைய கையால் வீரவேல் வழங்கி சூரணை வதம் செய்ய வழி அனுப்பி வைப்பார்.

அதே போன்று ஸ்ரீ கடம்பவன முருகன் கோயில் அறங்காவலர் குழு தலைவர் தேவி பாலமுரளி கிருஷ்ணன் தன்னுடைய மகன் அறங்காவல் உறுப்பினர் லோகேஷ் க்கிற்கு பூசாரிகள் கையால் பரிவட்டம் கட்டப்பட்டு வீர வேல் வழங்கி சூரனை வதம் செய்ய அனுப்பி வைத்து சூரணை வதம் செய்யும் காட்சியினை முருக பக்தர்கள் தத்ரூபமாக கண் குளிர கண்டு களித்தனர் தொடர்ந்து வதம் செய்த முருகப்பெருமானுக்கு அலங்காரங்கள் கலையப்பட்டு சுத்தப்படுத்தி (உதிரம் போக) பால் அபிஷேகம் சம்பிரதாயங்கள் செய்தனர் சுத்தம் செய்யப்பட்ட பின்னர் மீண்டும் அபிஷேகம் அலங்காரம் தீபாராதனைகளை செய்து பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானங்கள் வழங்கப்பட்டது தொடர்ந்து செவ்வாய்க்கிழமை காலை ஸ்ரீ தெய்வானை கடம்பவன முருகனுக்கும் திருக்கல்யாணம் உற்சவம் வெகு விமர்சையாக நடைபெற்றது இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கோயில் அறங் காவலர் குழு தலைவர் தேவி பால முரளி கிருஷ்ணன் அறங்காவல் உறுப்பினர் லோகேஷ் கிராம பொது மக்கள் விழா குழுவினர் அறங்காவலர் உறுப்பினர்கள் ஆகியோர் செய்திருந்தனர் மேலும் இதில் சீதே விகுப்பம் பிரயாங்குப்பம் கடம்பத்தூர் விடையூர் உள்ளூரிலிருந்தும். சென்னை ஆவடி உள்ளிட்ட வெளியூரிலிருந்தும் திரளான முருக பக்தர்கள் கலந்து கொண்டு கடம்பவன முருகனை வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா என முழக்கமிட்டு முருகன் அருள் பெற்று வழிபட்டு இல்லம் சென்றனர்

# வைகை அணையில் இருந்து 58 ம் கால்வாயில் தண்ணீர் திறப்பு!

ஆண்டிபட்டி, நவ.1

ஆண்டிபட்டி அருகே உள்ள உள்ள வைகை அணையில் இருந்து நேற்று 58ம் கால்வாயில் தண்ணீரை எம்பி தங்க தமிழ்ச்செல்வன் மற்றும் கலெக்டர் ரஞ்ஜீத் சிங் ஆகியோர் திறந்து வைத்தனர். தேனி மாவட்டம், ஆண்டிபட்டி அருகே 71 அடி உயரம் கொண்ட வைகை அணை நீர்மட்டம் கடந்த 2 வாரங்களுக்கு முன்பு முழு கொள்ளளவை எட்டி அணையில் இருந்து உபரி தண்ணீர் ஆற்றில் திறந்து விடப்பட்டு வருகிறது. இந்த நிலையில் உசிலம்பட்டி சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த விவசாயிகளும், பொது மக்களும் தங்கள் பகுதியின் நிலத்தடி நீரை பெருக்கும் வகையில் 58ம் கால்வாயில் வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்க வேண்டும் என தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர்.



பொதுவாக வைகை அணையின் நீர்மட்டம் 67 அடிக்கு மேல் இருந்தால் மட்டுமே 58ம் கால்வாயில் தண்ணீர் திறக்க முடியும் என்பதால், தற்போது அணையில் போதிய நீர் இருப்பதால் பொது மக்களின் கோரிக்கையை ஏற்று 58ம் கால்வாயில் தண்ணீர் திறக்க தமிழக அரசு ஆணை வெளியிட்டது. அதன்படி வைகை அணையில் இருந்து வினாடிக்கு 150 கன அடி வீதம் 58ம் கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த நிகழ்வில் தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ் செல்வன், தேனி மாவட்ட கலெக்டர் ரஞ்ஜீத் சிங், உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் அய்யப்பன் ஆகியோர் கலந்து கொண்டு மதகுகளில் தண்ணீரை திறந்து வைத்தனர். 58ம் கால்வாயில் திறக்கப்பட்ட தண்ணீர் இன்று காலை உசிலம்பட்டி பகுதியை சென்றடையும் எனவும், இந்த தண்ணீரின் மூலம் உசிலம்பட்டி சுற்று வட்டார பகுதிகளில் உள்ள 58 கண்மாய்களில் நீரைப் பெருக்க முடியும். 58ம் கால்வாயில் தண்ணீர் திறப்பால் மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டத்தில் 1912 ஏக்கர் நிலங்களும், திண்டுக்கல் மாவட்டம் நிலக் கோட்டை வட்டத்தில் 373 ஏக்கர் நிலங்களும் மொத்தம் 2,285 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று பொதுப்பணித்துறை தெரிவித்தனர்.

மேலும் தற்போது திறக்கப்பட்ட 58ம் கால்வாய் தண்ணீரின் மூலம் உசிலம்பட்டி சுற்றுவட்டார பகுதியில் நிலத்தடி நீர்மட்டமும் வெகுவாக உயரும் என்பதால் பொதுமக்களும், விவசாயிகளும் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இந்த நிகழ்வில் பொதுப் பணித்துறை செயற் பொறியாளர் சிவபிரபாகர், 58 கால்வாய் திட்ட செயற் பொறியாளர் மொக்கமாயன், வைகை அணை உதவி செயற்பொறியாளர் சேகரன், உதவி பொறியாளர் வரதன், ராஜங்கம் மற்றும் 58ம் கிராம விவசாய சங்கம் தலைவர் உதயகுமார், மதுரை மாவட்ட நஞ்சை புஞ்சை விவசாய சங்க தலைவர் பொன். மணிகண்டன், அனைத்து கள்ளர் கூட்டமைப்பு தலைமை ஒருங்கிணைப்பாளர் ஓ.வை. தியாகராஜன் மற்றும் உசிலம்பட்டி பகுதி விவசாயிகள் பொதுப்பணி துறை அதிகாரிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



## அரசம்பட்டி முத்தமிழ் அரசு மேல்நிலைப் பள்ளி

# +1 மாணவன் நிதீஷ்வர்மன் எரிபந்து போட்டியில் மாநில அளவில் தேர்வு!

போச்சம்பள்ளி,நவ.1

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகேஉள்ளஅரசம்பட்டி முத்தமிழ் அரசு மேல்நிலைப்பள்ளியை சார்ந்த 11ஆம் வகுப்பு படிக்கும் மாணவன் நிதிஷ்வர்மன் என்ற மாணவன் மாநில அளவிலான எறிபந்து (THROW BALL) போட்டியில் தேர்வு பெற்று தேசிய அளவிலான எறி பந்து போட்டிக்கு குஜராத் மாநிலம் அகமதபாத் செல்ல உள்ள நிலையில்.

அம் மாணவனை பள்ளியின் தலைமையாசிரியர் மற்றும் அனைத்து ஆசிரியர்கள் சார்பாக வாழ்த்தி வழியனுப்பி வைத்து அந்த

மாணவனுக்கு முதல்வர் கோப்பையில் மாவட்ட அளவில் கையுந்து பந்து போட்டியில் இரண்டாமிடமும் கபாடி போட்டியில் மூன்றாமிடம் பிடித்து மற்றும் மாநில போட்டிக்கு தேர்வு பெற்றார் அந்த மாணவருக்கு உடன்படிக்கும் சக மணவர்கள் மற்றும் அரசம்பட்டி உதவும் கரங்கள் அமைப்பு, உடற்கல்வி துறையின் மற்றும் ஆசிரியர்கள் சார்பாகவும் நிதி உதவி வழங்கி அனுப்பிவைக்கப்பட்டார்

இந்த நிகழ்வுக்கு பள்ளியின் உடற்கல்வி ஆசிரியர் பார்த்திபன் மற்றும் இளையப்பல்லவன் நன்றியை தெறிவித்துக்கொண்டனர்.

# கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட பூத் கமிட்டி ஆலோசனைக் கூட்டம்!

கிருஷ்ணகிரி,நவ.1

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட ஓசூர் தெற்கு பகுதி வட்டக் கழக செயலாளர் ஹேமகுமார் என்கின்ற கும்மி , தலைமையில் அதிமுக கட்சியின் சார்பில் பூத் கமிட்டி அமைப்பது குறித்தும் கட்சி வளர்ச்சிப் பணி குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது, இக்கூட்டத்துக்கு சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் பாலகிருஷ்ணா ரெட்டி,முன்னாள் சட்டமன்றஉறுப்பினர்மாநில அம்மா பேரவை மாநில இணை செயலாளர் கலசப்பாக்கம் பன்னீர்செல்வம், ஆகியோர் கலந்து கொண்டு பேசுவையில் தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்ட தேர்தல் பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் இதில், சமூக ஊடகங்களை முழுமையாக பயன்படுத்தி, கட்சி கோட்பாடுகள், வளர்ச்சி பணிகள் மற்றும் பொதுமக்கள் நலத்திட்டங்களை மக்கள் மத்தியில் விரைவாக விரிவுபடுத்தும் வகையில் செயல்திட்டங்கள்குறித்து சமூக ஊடகங்களில் கட்சி தாக்கத்தை அதிகரிக்க புதிய முயற்சிகள், வீடியோ, கிராபிக்ஸ், மெம்கள் மற்றும் நேரலை (live) நிகழ்ச்சிகள் மேற்கொள்ள வேண்டியதின் அவசியம் வலியுறுத்தப்பட்டது, இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவ்வை தலைவர் மாமன்ற உறுப்பினருமான நாராயணன், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட பாசறை மாவட்ட துணை செயலாளர் சுரேஷ், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட பூத் கமிட்டி பயிற்சியாளர்கள் சேலம் மண்டலமண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு இணை செயலாளர் சதீஷ், சேலம் மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்டம் செயலாளர் பிரசன்ன, சேலம் மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்ட இணை செயலாளர் யாதவிரபு, மேலும்மேலும் வட்டக் கழக செயலாளர் கோபாலர் ராமச்சந்திரன், பூத் கமிட்டி கிளைகழக நிர்வாகிகள் எனக்கு கலந்து க் கொண்டனர்.





# கலைஞர் கனவு இல்ல கட்டுமான பணிகளை ஆணையாளர் ஆய்வு!

நத்தம், நவ.1

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே லிங்கவாடி ஊராட்சி எல். மலையூரில் கலைஞர் கனவு இல்ல திட்டத்தில் வீடுகள் கட்டும் பணிகள் நடந்து வருகிறது.

இந்நிலையில் பயனாளிகள் கட்டி வரும் இந்த பணிகளை யூனியன் ஆணையாளர் கிருஷ்ணன் ஆய்வு செய்தார். தொடர்ந்து அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவுகளை சாப்பிட்டு ஆய்வு செய்த ஆணையாளர் மையத்தில் வெளியில் சுற்றி இடையூறாக உள்ள செடி, கொடிகளை அகற்ற பணியாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ஆய்வு செய்த ஆணையாளர் சேதமடைந்த மேற்கூரைகளை பழுதுநீக்கம் செய்ய மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரை செய்தார். இதில் ஊராட்சி செயலர் அன்புச்செல்வம் உள்ளிட்ட ஊரகவளர்ச்சித் துறை அலுவலர்கள் ஆய்வின் போது உடனிருந்தனர்.



மேலூர் நகராட்சி பகுதியில் உள்ள வார்டுகளில் சிறப்பு கூட்டம் நடைபெற்றது. 12வது வார்டு நகர்மன்ற உறுப்பினரும், வழக்கறிஞருமான அறிவழகன் தலைமையில் வார்டு சிறப்பு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு நகராட்சி வருவாய் ஆய்வாளர் சரண்யா, பணிஆய்வர் மோகன்ராஜ் ஆகியோர் பொதுமக்களிடம் இருந்து மனுவை பெற்றுக்கொண்டனர்.



மதுரை மாவட்டம் மேலூர் நகராட்சி பகுதியில் உள்ள வார்டுகளில் சிறப்பு கூட்டம் நடைபெற்றது. 26வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் கலைச்செல்வி செந்தில்குமார் என்ற முருகன் தலைமையில் வார்டு சிறப்பு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு நகராட்சி படவரைவாளர் செங்கிஸ்கான் பொதுமக்களிடம் இருந்து மனுவை பெற்றுக்கொண்டனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த திம்மாம்பேட்டை ஊராட்சிக்கு உட்பட்ட சமத்துவபுரம்என்றபகுதியில்வேறுபகுதிமக்களுக்குபட்டாவழங்குவதைகண்டித்துதிம்மம்பேட்டை பஸ் நிலையத்தில் பொதுமக்கள் சாலை மறியல் ஈடுபட்டனர். அவர்களை காவல்துறையினர் கைது செய்து ஏ என் திருமண மண்டபத்தில் அடைத்தனர்.



கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம், வார்டு எண். 70க்குட்பட்ட தியாகராயர் புது வீதி பகுதியில் மாநகராட்சியின் சார்பில் அதிநவீன கழிவுநீர் உறிஞ்சும் வாகனம் மூலம் (SUPER SUCKER VEHICLE) பாதாள சாக்கடைகளில் ஏற்பட்டுள்ள அடைப்புகளை சரி செய்யும் பணிகளை மாநகராட்சி ஆணையாளர் திரு.மா.சிவகுரு பிரபாகரன் நேரில் சென்று, பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, இவ்வாகனத்தின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார். உடன் நகர்நல அலுவலர் மரு.மோகன், உதவி ஆணையர் செல்வி.நித்யா, உதவி செயற்பொறியாளர் ஹேமலதா, மண்டல சுகாதார அலுவலர் குணசேகரன், மாமன்ற உறுப்பினர் சர்மிளா, உதவி பொறியாளர் .சதீஷ்குமார், சுகாதார ஆய்வாளர் தனபாலன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில், வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 மாவட்ட அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ப.சரவணன், இ.கா.ப., கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ரவீந்தர் குமார் குப்தா இ.கா.ப., உதவி இயக்குநர் (வழக்கு நடத்துமை (முகமை) பா.கலா, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் வளர்மதி, மாவட்ட அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழு உறுப்பினர்கள் குமரவேல், தனஞ்செழியன், வழக்கறிஞர் அகத்தியன், ஆறுமுகம் கடவம்பாக்கம் மணி உட்பட பலர் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தாட்கோ துறையின் மூலமாக மாண்புமிகு முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பயனாளிக்கு பயணியர் ஆட்டோ வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமையில், தாட்கோ தலைவர் என்.இளையராஜா அவர்கள், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன் அவர்கள், ஆகியோர் வழங்கினார்கள். உடன் தாட்கோ மேலாளர் உ.ரமேஷ்குமார், உதவி மேலாளர் ந.சதீஷ்குமார் உட்பட பலர் உள்ளனர்.

# லாக்மீ ஃபேஷன் வீக்கில் கம்ஃபர்ட் 'பெர்ஃப்யூம் டீலக்ஸ்' அறிமுகம்; ஃபேஷன்–நறுமண இணைப்பின் புதிய அனுபவம்!

**சென்னை ,நவ.1**

ஹிந்துஸ்தான் யூனிலீவரின் ஃபேப்ரிக் கண்டிஷனர் பிராண்டான கம்ஃபர்ட், தொழில்துறையில் முதல் முறையாக லாக்மீ ஃபேஷன் வீக் x FDCI நிகழ்வில் புதிய 'பெர்ஃபியூம் டீலக்ஸ்' லக்ஸ் ரேஞ்சை அறிமுகப்படுத்தியது.




உயர்தர நறுமணங்களின் தாக்கத்தில் உருவான இந்தப் பிரீமியம் ரக தொகுப்பு, ஸ்டைல், நறுமணம் மற்றும் சுய வெளிப்பாட்டை கொண்டாடும் பல்புலனுணர்வு அனுபவத்தை வழங்கியது.

நடிகை பூஜா ஹெக்டே, இந்த புதிய ஆடம்பர ரகத்தின் சாரத்தை உருவகப்படுத்தி, அதன் நேர்த்தியையும் உயர்தரத்தையும் வெளிப்படுத்தினார். மேலும், ஜெனிபர் விங்கெட், கல்யாணி பிரியதர்ஷன், அமலா பால், நிஹாரிகா NM உள்ளிட்ட பல பிரபலங்கள் ஒவ்வொருவரும் தனித்துவமான நறுமணங்களை பிரதிநிதித்துவப்படுத்தி நிகழ்வை சிறப்பித்தனர். இதன் மூலம் "ஸ்டைல் என்பது காண்பதற்கும் கூட, உணர்வதற்கும் இயன்றது" என்ற கம்ஃபர்ட்டின் நோக்கம் வலுப்பெற்றது.

"கம்ஃபர்ட் பெர்ஃபியூம் டீலக்ஸ் மூலம், நாங்கள் துணி பராமரிப்பை தனிப்பட்ட ஸ்டைலின் ஒரு முக்கிய அங்கமாக உயர்த்துகிறோம்.

இது ஒரு தயாரிப்பு அறிமுகத்தைத் தாண்டி, நாளந்தோறும் அனுபவிக்கப்படும் லைஃப்ஸ்டைல் மேம்பாட்டாகும் இந்த முயற்சியால், கம்ஃபர்ட் தன்னை ஒரு 'உயர்தர நறுமண நிபுணராக' நிலை நிறுத்தியுள்ளது.

## டி.கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி:

# மாணவ மாணவிகளின் பெற்றோர்கள் ஊராட்சி நிர்வாகத்திற்கு நன்றி!

**உளுந்தூர்பேட்டை,நவ.1**

திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட டி.கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 100மேற்பட்ட மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர்.

பள்ளி வளாகத்தில் புல் செடி கொடி மண்டி கிடக்கிறது விச பூச்சி பள்ளி வளாகத்தில் வருகிறது என சுத்தம் செய்து தர வேண்டும். என பெற்றோர்கள் கோரிக்கை வைத்தனர்.கோரிக்கை ஏற்று உடனே JCB இயந்திரம் சுத்தம் செய்யும் பணி நடைபெற்றது இதனால் பெற்றோர்கள் ஊராட்சி நிர்வாகத்திற்கு நன்றி தெரிவித்தனர்.

## சிந்திப்பானா முதலீடு, நிலையான வருமானம்:

# காயின் ஸ்விட்ச் Q3 அறிக்கை சொல்லும் சென்னையின் கிரிப்டோ எழுச்சி!

**சென்னை, நவ.1**

இந்தியாவின் மிகப்பெரிய கிரிப்டோ வர்த்தக தளம் காயின் ஸ்விட்ச் (CoinSwitch) தனது 'India's Crypto Portfolio: How India Invests' Q3 2025 அறிக்கையை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கை, 2.5 கோடி பயனர்களின் தரவுகளின் அடிப்படையில், நாட்டின் கிரிப்டோ முதலீட்டு பழக்கங்கள் மற்றும் மக்கள் தொகை சார்ந்த போக்குகளை வெளியிடுகிறது. இதன்படி, ஜென் Z (18–25) தலைமுறையினர் 37.6% பங்குடன் இந்தியாவின் முன்னணி முதலீட்டாளர்கள் உருவெடுத்துள்ளார். அறிக்கையில், சென்னை இந்தியாவின் மிகவும் நிலையான கிரிப்டோ சந்தைகளில் ஒன்றாக தொடர்கிறது என கூறப்பட்டுள்ளது. 70.3% போர்ட்ஃபோலியோக்கள் லாபத்தில் இருப்பது, முதலீட்டாளர்களின் நீண்டகாலம், பல்வகைப்படுத்தல் மற்றும் பொறுப்பான பங்கேற்பு மூலம் செல்வம் உருவாக்கும் திறனை பிரதிபலிக்கிறது. மேலும், பெரிய மதிப்புடைய லார்ஜ்கேப் மற்றும் ப்ளூசிப் சொத்துக்கள் முதலீட்டாளர்களிடம் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளன.

"இந்திய கிரிப்டோ சந்தை முதிர்ச்சிகட்டத்தை நோக்கி நகர்கிறது. மெட்ரோக்களில் முன்னணியில் இருந்தாலும், கிரிப்டோ வளர்ச்சியின் அடுத்த கட்டத்தை Tier2, Tier3 நகரங்களே வடிவமைக்கும்," என காயின்ஸ்விட்சின் துணைத்தலைவர்பாலாஜி ஸ்ரீஹரி தெரிவித்துள்ளார். அறிக்கையில், கொல்கத்தா 77% போர்ட்ஃபோலியோ லாபத்துடன் நாட்டின் மிக அதிக லாபம் காணும் கிரிப்டோ நகரமாக திகழ்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் எழுத்தாளர்களின் படைப்பு!

**விழுப்புரம்,நவ.1**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகத்தின் கலை, கலாச்சாரம் மற்றும் இலக்கியம் தொடர்பான திறனை மேம்படுத்தி அதனை உயர்த்தும் நோக்கில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டுச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டு அச்சங்கத்தின் மூலம் 2024 2025ம் ஆண்டிற்கு 11 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் எழுத்தாளர்களின் படைப்புகளை தெரிவு செய்து அவர்களுக்கு சிறந்த எழுத்தாளர்களுக்கான (Best Writers Award) நிதி உதவித்தொகை தலா ரூ.1,00,000/ (ரூபாய் ஒரு இலட்சம்) வழங்கப்பட உள்ளதாக அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, விழுப்புரம் மாவட்டத்தில் கலை, கலாச்சாரம் மற்றும் இலக்கியம் தொடர்பான திறனை மேம்படுத்திக் கொள்ள ஏதுவாக தகுதியுள்ள விண்ணப்ப த்தாரர்களின் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதற்கான விண்ணப்பங்களை தொடர்புடைய மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகங்களிலும் / ஆதிதிராவிடர் நல ஆணையரகத்திலும் அரசு வேலை நாட்களில் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

மேலும், இவ்விண்ணப்பங்களை www.tn.gov.in என்ற இணையதளத்திலும் (Website) () https://www.tn.gov.in/form view.php?depid=MQ== இணைதள முகவரியிலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.விண்ணப்பதாரர்கள் தங்களது படைப்பினை இரு நகல்களிலும், டிஜிட்டல் (Digital) முறையிலும் உரிய படிவத்தில் பூர்த்தி செய்து 14.11.2025க்குள் விழுப்புரம் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் நேரில் சமர்ப்பிக்குமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தெரிவித்துள்ளார்.



# சிவகாசி விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் தேவர் ஜெயந்தி விழா அனுஷ்டிப்பு!

**சிவகாசி, நவ.1**

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் சிவகாசி மாநகர மாவட்ட செயலாளர் செல்வின் ஏசுதாஸ், தலைமையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் 118 வது பிறந்த நாள் விழா சிவகாசியில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினோம். இந்த நிகழ்வில் வல்லரசு, செல்வகுமார், திலீபன், செங்கோல் ராஜ், அசோக் குமார், பைக் பாண்டியன், தமிழ்ச் செல்வன்,தீபன் சக்கரவர்த்தி, விசிக தங்கம், ஜோதிராஜ், அகஸ்தியன், வேல்முருகன், குமார், தமிழ் அரசு பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர் .



விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தாட்கோ துறையின் மூலமாக முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தற்காலிக தூய்மை காவலர்களுக்கு நலவாரியம் உறுப்பினர் அடையாள அட்டைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமையில், தாட்கோ தலைவர் .என்.இளையராஜா , விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன் அவர்கள், ஆகியோர் வழங்கினார்கள். உடன் தாட்கோ மேலாளர் திரு.உ.ரமேஷ்குமார், உதவி மேலாளர் ந.சதீஷ்குமார் உட்பட பலர் உள்ளனர்.

## வாணியம்பாடி அருகே

# இலவச வீட்டு மனை வழங்குவதை கண்டித்து கிராம மக்கள் சாலைமறியல் போராட்டம்!

**வாணியம்பாடி,நவ.1**

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த திம்மாம்பேட்டை பேருந்து நிறுத்தம் அருகில் கிராம மக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வாணியம்பாடி நகர பகுதியில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு அங்கே வீடுகளை இழுந்த மக்களுக்கு திம்மாம்பேட்டை ஊராட்சிகுட்பட்ட சமத்துவபுரம் பகுதியில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் இலவச வீட்டு மனை பட்டா வழங்க வருவாய்த் துறையினர் ஏற்பாடு செய்து வருவதாக கூறப்படுகிறது.

இதனை அறிந்த கிராம மக்கள் வேறு பகுதியை சேர்ந்த மக்களுக்கு சமத்துவபுரம் பகுதியில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் இலவச வீட்டு மனை பட்டா வழங்கக் கூடாது என்றும், பகுதி மக்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா, ஆரம்ப சுகாதார நிலையம், அங்கன்வாடி மையம், நியாயவிலை கடை, சிறு விளையாட்டு பூங்கா, மயானம் உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற பின்னர் மற்றவர்களுக்கு அரசு இலவச வீட்டு மனை பட்டா வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன் வைத்து கிராம மக்கள் சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கோவிந்தராசு தலைமை போலீசார் மற்றும் வாணியம்பாடி வட்டாட்சியர் சுதாகர் தலைமையில் வருவாய் தறையினர் ஆகியோர் விரைந்து சென்று போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். பேச்சுவார்த்தையில் உடன்படாததால் தொடர்ந்து போராட்டத்தில் ஏற்பட்ட காரணமாக போராட்டத்தில் ஈடுபட்ட சுமார் 100 பேரை போலீசார் கைது செய்து தனியார் மண்டபத்தில் சிறை வைத்துள்ளனர். சாலை மறியல் போராட்டம் காரணமாக திம்மம்பேட்டை வாணியம்பாடி சாலையில் சுமார் 1 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இதை கோரிக்கை வலியுறுத்தி கடந்த ஆகஸ்ட் 14 ஆம் தேதி திம்மாம்பேட்டை அருகே சமத்துவபுரம் கூட்டு சாலையில் கிராமமக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதை குறிப்பிடத்தக்கது.



கோவை மாநகர் தெற்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ராமநாதபுரம் பகுதி கழகத்தில் சுதந்திர போராட்ட தியாகி ஐயா பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களின் 118 வது குருபூஜை விழாவில் கலந்து கொண்டு, கோவை மாநகர் மாவட்ட செயலாளர் துரை. செந்தமிழ்ச்செல்வன் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் வெ.ந.உதயகுமார், மு.ம.ச.முருகன், பகுதி கழக பொறுப்பாளர் பசுபதி மாமன்ற உறுப்பினர் சாந்தி முருகன், வட்டக்கழக செயலாளர் சண்முகசுந்தரம் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், அங்காளம்மன் கோவில் அறங்காவலர் தலைவர் உதயகுமார் சித்தி விநாயகர் கோயில் அறங்காவலர் தலைவர் தனபால்கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணகிரியில்

# தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் 3 நாள்கள் பயிற்சி முடித்தவர்களுக்கு சான்றிதழ்!

**கிருஷ்ணகிரி,நவ.1**

கிருஷ்ணகிரியில் பெண் தொழில் முனைவோர்களை உருவாக்கும் நோக்கில், தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் கீழ் பெண்களுக்கான மூன்று நாட்கள் தொழில் முனைவோர் பயிற்சிகள் அளிக்கப்பட்டது,



இந்த பயிற்சி முகமூலமாக பெண்களுக்கு மூலிகை சோப்பு, ஷாம்பு, மற்றும் மூலிகை வகையான பொருட்கள் தயாரிப்பது குறித்தும் வங்கிக் கடன் பெறுவது எப்படி, தொழில் தொடங்கும் முறைகள், ஆன்லைன் மூலம் டிஜிட்டல் மார்க்கெட்டிங்செய்வதுபோன்ற பல்வேறு தலைப்புகளில் பயிற்சி மற்றும் செயல்விளக்கப் பயிற்சிகளை கோவையைச் சேர்ந்த நுகர்வோர், குழந்தைகள் உரிமை மற்றும் பெண்கள் வளர்ச்சி பாதுகாப்பு மையத்தின் மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் சிவபாரதி, தொண்டு நிறுவன இயக்குனர் சத்திய பிரியா, பயிற்றுனர் முரளி ஆகியோர்கள் கலந்துக் கொண்டு பயிற்சி மற்றும் செயல்விளக்க பயிற்சிகளை அளித்தனர். மேலும் மூன்று நாள்கள் பயிற்சி முடித்த பெண்களுக்கு சான்றிதல் வழங்கும் விழா அரசு கலைக்கல்லூரியில் நடைப்பெற்றது. இவ்விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக கல்லூரியின் முதல்வர் திருமதி கீதா கலந்துக்கொண்டுதொழில் முனைவோர் பயிற்சி முடித்த பெண்களுக்கு சான்றிதழ்களை வழங்கி இது போன்ற பயிற்சிகள் எங்கள் கல்லூரியில் படிக்கும் மாணவிகளுக்கு இனி மேல் அளித்து அவர்களையும் தொழில் முனைவோர்களாக ஆக்குவதாக தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து தொழில் முனைவோருக்கான பயிற்சிகள் முடித்து தமிழக அரசால் சான்றிதழ் பெற்று இருப்பது மிகவும் மகிழ்ச்சியக உள்ளது,

இந்த பயிற்சிகள் எங்களை போன்ற நடுத்தர குடும்பத்தை சேர்ந்த பெண்கள் இனியாரையும் சார்ந்து கைக்கட்டி நிற்க வேண்டிய அவசியம் இல்லை, இந்த பயிற்சி மூலம் எங்களாலும் 10 பேருக்கு வேலை வாய்ப்பினைஏற்படுத்திகொடுக்க முடியும் என்ற நம்பிக்கை எழுந்துள்ளது, மேலும் இப்பயிற்சி முடித்தவர்கள் தொழில் தொடங்க தமிழ்நாடு அரசு சார்பில் மானியத்துடன் கூடிய கடன் வழங்கவும் ஏற்பாடு செய்யப்படுகிறது என்பது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது என்று குறிப்பிட்டனர்.



## ஆத்தூரில்
# தி.மு.க. ஆலோசனைக்கூட்டம்!
## எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. பங்கேற்பு!!

ஆத்தூர்,நவ.1

சேலம் மாவட்டம் ஆத்தூர் துளுவ வேளாளர் திருமண மண்டபத்தில் நேற்று சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் ,பாகமுகவர்கள், பூத்டிஜிட்டல் ஏஜென்ட், பூத் கமிட்டி உறுப்பினர்கள் ,மற்றும் வார்டு செயலாளர்கள், கிளை செயலாளர்கள், ஆலோசனைக் கூட்டம் சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர், மாநிலங்களவை உறுப்பினர் எஸ் ஆர் சிவலிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது . இந்த கூட்டத்தில் பேசிய மாவட்ட செயலாளர் எஸ் ஆர் சிவலிங்கம் பேசும் போது நிர்வாகிகள் அனைவரும்

வரும் நாட்களில் விடா முயற்சியுடன் ஒவ்வொரு வீடாக சென்று திமுகவின் செயல்பாடுகளை எடுத்துக் கூற வேண்டும் தினந்தோறும் மதியம் 3:30 மணி முதல் ஒரு பூத் என்ற கணக்கில் அனைத்து நிர்வாகிகளும் சென்று வாக்கு சேகரிக்க வேண்டும் மற்றும் பொதுமக்களிடம் உள்ள குறைகளை மனுவாக பெற வேண்டும் என்றும் கூறினார்.

ஆலோசனை கூட்டத்தில் ஒன்றிய செயலாளர் செழியன் நகர செயலாளர்கள் வேல்முருகன், பாலசுப்பிரமணியன், ராமச்சந்திரன், மற்றும் நெசவாளர் அணி அமைப்பாளர் ஏஏ ஆறுமுகம், சேலம் கிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணியின் அமைப்பாளர் அருண், சேலம் கிழக்கு மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சேகர், சேலம் கிழக்கு மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர் ஆவின் செல்வமணி, நகர மன்ற உறுப்பினர் சம்பத், பத்திரம் மனோகரன்,மல்லியகரை ராஜா, நகரதுணை செயலாளர் பிரகாஷ், வார்டு செயலாளர் அசோகன், ஏத்தாப்பூர் சக்தி முருகன், தியாகராஜன், மஞ்சினி அரசு, ராமநாயக்கன்பாளையம் கருணாநிதி, மற்றும் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



# மல்லசமுத்திரம் பகுதியில் வாகன தணிக்கை!

திருச்செங்கோடு,நவ. 1

திருச்செங்கோடு அருகேயுள்ள மல்லசமுத்திரம் பகுதியில் வட்டார போக்குவரத்து அலுவலர் மோகனப்பிரயா தலைமையில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை1 உமாமகேஸ்வரி முன்னிலையில் மல்லசமுத்திரம் பகுதியில் திடீர் வாகன தணிக்கை மேற்கொண்டார்.

அப்போது இருசக்கர வாகன ஓட்டிகள் செல்போன் பேசிக்கொண்டு சென்றவர்கள், ஹெல்மெட் அணியாமல் சென்றவர்கள், ஆகிய வாகனங்களை நிறுத்தி வாகனங்களுக்கு சோதனை அறிக்கை வழங்கப்பட்டு ஹெல்மெட் அணிவதன் அவசியம் குறித்தும், சாலையில் செல்லும் பொழுது செல்போன் பேசாமல் செல்ல வேண்டும் என்றும் அறிவுரை வழங்கப்பட்டு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும் அதிக பாரம் ஏற்றி சென்ற வாகனங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. வரி செலுத்தாத வாகனங்களுக்கு வரி வசூலிக்கப்பட்டது. இவ்வாறாக அரசுக்கு வருவாயாக வரி ரூ.1 லட்சம் மற்றும் அபராதமாக ரூ.1.5 லட்சம் வரையும் சுமார் ரூ.2 1/2 லட்சம் வரை அபராதம் விதிக்கப்பட்டது. மேலும் மல்ல சமுத்திரம் பேருந்து நிலையம் உள்ளே சென்று வராத பேருந்து ஓட்டுநர் உரிமையாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு பேருந்து நிலையம் உள்ளே சென்றுவர அறிவுரை வழங்கப்பட்டது.இனிமேல் இதுபோன்ற தொடர் சோதனை நடத்தப்படும் என்று வட்டார போக்குவரத்து துறை சார்பில் மோட்டார் வாகன ஆய்வாளர் உமாமகேஸ்வரி மூலம் அறிவுறுத்தப்பட்டது.



# அதிமுக பூத் கமிட்டி முகவர்கள் ஆலோசனை கூட்டம்!

கெலமங்கலம்,நவ.1

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிகோட்டையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக கிருஷ்ணகிரி மாவட்ட கெலமங்கலம் மேற்கு ஒன்றி கழகத்தின் சார்பில் கழக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி ஆணைக்கினங்க தேன்கனிகேட்டையில் தனியார் மண்டபத்தில் பூத்கமிட்டி முகவருக்கான ஆலோசனை கூட்டம் கெலமங்கலம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜெய்பால் தலைமையில், நடைப்பெற்றது,

இதில் அதிமுக மேற்கு மாவட்ட செயலாளர் பாலகிருஷ்ண ரெட்டி சிறப்பு அழைப்பாளராகவும், மேலும் தேர்தல் பணி குழு பொருப்பாளர் பன்னிர் செல்வம், ஆகியோர் கலந்து கொண்டனர்,

பால்நாரயணன், தேன்கனிகோட்டை நகர செயலாளர் பழனிசாமி, தேன்கனி கோட்டை முன்னாள் பேரூராட்சி தலைவர் நாகேஷ். தொழிலதிபர் ராமமூர்த்தி, ஜெயராமன், மற்றும் கழக பொருப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கோவை ஆர்.எஸ்.புரம் திவான் பகதூர் சாலையில் உள்ள பன்னடுக்கு நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தினை மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

## காவேரிப்பட்டினத்தில்
# கிழக்கு மாவட்ட காங்கிரஸ் சார்பில் இந்திராகாந்தி நினைவு தினம் அனுசரிப்பு!



கிருஷ்ணகிரி,நவ.1

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் முன்னாள் பாரத பிரதமர் அன்னை இந்திரா காந்தியின் நினைவு தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

காவேரிப்பட்டினம் பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையம் அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்த அன்னை இந்திரா காந்தியின்

திரு உருவப்படத்திற்கு காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினரும், முன்னாள் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவருமான எல் சுப்பிரமணியன் கலந்துக் கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பின்னர் பயங்கரவாத உறுதிமொழி எடுத்துக் கொண்டதோடு நாடு நலம் பெற இளம் தலைவர் ராகுல்காந்தி தலைமையிலான நல்லாட்சி அமைந்திட நாம் அனைவரும் ஒன்றுனைந்து செயல்பட வேண்டும் என்று உறுதிமொழியும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

காங்கிரஸ் கட்சியின் வட்டார பொறுப்பாளர் மாரியப்பன் தலைமையில் நடைப்பெற்ற இந்த நினைவு நாள் கூட்டத்திற்கு வட்டார பொறுப்பாளர் பாக்கியராஜ், தங்கையா, முன்னாள் கவுன்சிலர் சுப்பிரமணி, முன்னாள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் முத்து , நகர தலைவர் ஸ்ரீராம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்,

மேலும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த சிறுபான்மை பிரிவு தலைவர் முஸ்தப்பா, மாவட்ட துணைத் தலைவர் சத்திவேல், கலைப் பிரிவு மாவட்ட துணைத் தலைவர் தேவேந்திரன் மற்றும் நகர நிர்வாகிகளான தினேஷ் கௌதம், முன்னாள் நகர தலைவர் பச்சியப்பன், பாலு உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டு அன்னை இந்திரா காந்தியின் திரு உருப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

# பெண்ணை அடித்துக்கொன்ற வாலிபருக்கு ஆயுள் தண்டனை!
## ஊட்டி கோர்ட்டு தீர்ப்பு!!

ஊட்டி, நவ.1

நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகே கல்லட்டி அண்ணா நகர் பகுதி சேர்ந்த புஷ்பராஜ், மனைவி சோபனகுமாரி, (38), தம்பதிகளுக்கு மூன்று குழந்தைகள் உள்ளது. பக்கத்து வீட்டில் வசிக்கும் பாலசுப்பிரமணியன் இரு வீட்டருக்கும் கழிவுநீர் செல்வதில் அடிக்கடி தகராறு இருந்து வந்துள்ளது. இந்நிலையில் கடந்த 2021ம் ஆண்டு செப்., மாதம் 25ம் தேதி சோபனகுமாரி வீட்டிலிருந்து புறப்பட்டு வெளியே சென்ற போது, பாலசுப்ரமணியத்தின் மகன் மணிகண்டன், (32), சோபனகுமாரியிடம் தகராறில் ஈடுபட்டு, மறைத்து வைத்திருந்த அரிவாள், இரும்பு கம்பியை எடுத்து தாக்கியுள்ளார். பலத்த காயமடைந்த சோபனகுமாரியை அப்பகுதியினர் மீட்டு ஊட்டி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தனர். கோமா நிலையில் இருந்த சோபனகுமாரி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இச்சம்பவம் குறித்து மருத்துவமனை வாயிலாக புதுமந்து போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் சம்பவ பகுதிக்கு வந்து விசாரணை மேற்கொண்டு கொலை வழக்கு பதிவு செய்தி 2021 ம் ஆண்டு செப்., 26ம் தேதி கைது செய்து சிறையில் அடைத்தனர். இவ்வழக்கு ஊட்டி மகிளா கோர்ட்டில் நடந்து வந்தது. நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. மணிகண்டன் மீது குற்றச்சாட்டு நிரூபணமானதால் ஆயுள் தண்டனை மற்றும் ஒரு லட்சம் ரூபாய் அபராதம் விதித்து நீதிபதி செந்தில்குமார் உத்தரவிட்டார். பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு இழப்பீடாக ஒரு லட்ச ரூபாய் அரசு வழங்க வேண்டும். மாவட்ட கலெக்டர் இழப்பீட்டை பெற்று தர நடவடிக்கை எடுக்க வேண்டும். என, உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பில் வக்கீல் செந்திில்குமார் ஆஜரானார்.

# போலி இணைப்புகள், மோசடி அழைப்புகள், தீங்கிழைக்கும் ஆப்கள்:
## ஆன்லைன் ஷாப்பிங் போது பாதுகாப்பாக இருப்பதற்கான ஃப்ளிப்கார்ட் பரிந்துரைகள்

சென்னை,நவ.1

இந்தியா முழுவதும் மில்லியன் கணக்கான மக்கள் ஆன்லைனில் ஷாப்பிங் செய்வது வழக்கமான சூழலாக உள்ளது. இதன் பின்னணியில், சைபர் மோசடிகள் அதிகரித்து வருவதாக ஃப்ளிப்கார்ட் எச்சரிக்கை விடுத்துள்ளது. போலி வலைத்தளங்கள், மோசடி அழைப்புகள், சந்தேகத்திற்கிடமான ஆப்கள் ஆகியவை பயனர்களை இலக்காகக் கொள்ளும் பரவலான முறைகளாகும். இவை காலகட்டங்களில் மட்டும் அல்லாது, அன்றாட சந்தர்ப்பங்களிலும் நடப்பதால் பயனர்கள் அதிக விழிப்புடன் இருக்க வேண்டும் என நிறுவனம் அறிவுறுத்துகிறது.

பிரம்மாண்ட சலுகைகள், “கூடையில் சேர்” போன்ற விரைவு கிளிக்குகள் உள்ளிட்ட வழக்கமான செயல்பாடுகளிலும் மோசடி நுழையக்கூடும். சந்தேகத்திற்கிடமான லிங்குகளைத் தவிர்க்கவும், தனிப்பட்ட தகவல்களைப் பகிர வேண்டாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. வலுவான கடவுச்சொல் பயன்படுத்துதல், அதிகாரப்பூர்வ தளங்களிலேயே பரிவர்த்தனை செய்தல், போலி வலைத்தளம்/ஆப் அறிகுறிகளை கவனித்தல், சந்தேகத்திற்கிடமான அழைப்புகளைத் துண்டித்தல் போன்ற நடைமுறைகள் முக்கியம் என கூறப்பட்டுள்ளது.

“பயனர்கள் அதிகமாகத் தகவலறிந்தும் சுயபாதுகாப்புடன் இருந்தால், சைபர் குற்றவாளிகள் ஏமாற்றுவதற்கான வாய்ப்பு குறையும். ஃப்ளிப்கார்ட் பாதுகாப்பு அமைப்புகளை தொடர்ந்து மேம்படுத்தி வரும் நிலையில், பயனர்களும் சந்தேகத்திற்கிடமான செயல்பாடுகளைப் புகாரளிப்பதும், உண்மையான மூலங்களை மட்டுமே நம்புவதும் அவசியம்,”

என்று ஃப்ளிப்கார்ட் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# கோவையில் கலை பண்பாட்டுத்துறை சார்பில் மாபெரும் சங்கமம் நம்ம ஊரு திருவிழா!
## தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைக்கவுள்ளார்!!

கோவை,நவ.1

தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் சென்னை மற்றும் தமிழ்நாட்டின் எட்டு நகரங்களில் சங்கமம் – நம்ம ஊருதிருவிழா நடத்தப்பட்டு வருகிறது.. இவ்வாண்டின் கோயம்புத்தூர் சங்கமம் நம்ம ஊரு திருவிழா வ. உ. சி மைதானத்தில் வருகின்ற நவம்பர் 1 சனிக்கிழமை அன்று மாலை 5.30 மணிக்கு தொடங்குகிறது.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் விழாவினை தொடங்கி வைத்து விழா பேருரையாற்ற உள்ளார்கள். கோவை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவில் கடலூர் சுதாகர், சரஸ்வதி குழுவினரின் தொடங்கும் இவ் விழாவில் திரைப்பட புகழ் பாடகர்கள் ஜான் சுந்தர் , நவக்கரை நவீன் பிரபஞ்சன் ஆகியோரின் பாடல்கள் மற்றும் இசைக்குழுவினரோடு திருப்பூர் முருகன், ஈரோடு தேவி, திருப்பூர் மின்னல், கோவை முருகன், தூத்துக்குடி குமார ராமன் மற்றும் ஈரோடு இசைப்பள்ளி மாணவிகள் என 75 கலைஞர்கள் இணைந்து நையாண்டி மேளம், கரகாட்டம், தப்பாட்டம், ஜிக்காட்டம், தேவராட்டம், பம்பையாட்டம் ஆகிய கலைகளுடன் வழங்கும் தமிழ் அமுது நிகழ்ச்சி நடைபெறுகிறது. தொடர்ந்து விழுப்புரம் ஜனார்த்தனம் கலைக்குழுவின் மல்லர் கம்பம், கிருஷ்ணகிரி கிராமிய இசைத்தென்றல் குழுவின் இறை நடனம், கோவை கௌமார மடாலயம் கொங்கு பண்பாட்டுக் குழுவினரின் சலங்கையாட்டம், திருப்பூர் கலைமகள் கலைக்குழுவினரின் உடுக்கை பாடல், கோவை சிங்கை கலைக்குழுவினரின் வள்ளிக்கும்மி, சிவகங்கை வைகைப்பிரபா குழுவினரின் கிராமிய பாடல்கள், கிருஷ்ணகிரி மகிழம் குழுவினரின் கைச் சிலம்பாட்டம், திருவண்ணாமலை மகாலட்சுமி நாடக சபா வழங்கும் தெருக் கூத்து ஆகியவை நடைபெறும்.

நவம்பர் 2 ஆம் தேதி ஞாயிற்றுகிழமை அன்று மாலை 5.00 மணிக்கு தொடங்கும் விழாவில் கோவை அலமேலு மங்கம்மாள் குழுவினரின் காவடியாட்டம், மதுரை சமர் குழுவினரின் பறையாட்டம், நீலகிரி மலையரசி குழுவினரின் தோடர் நடனம், கோயம்புத்தூர் கிரியாஞ்சலி அகாடமி பைன் ஆர்ட்ஸ் குழுவினரின் பரதநாட்டியம், மதுரை ஸ்ரீ கலைத்தாய் கிராமிய கலைக் குழுவினரின் கரகாட்டம், விருதுநகர் பாண்டிராணி குழுவினரின் வில்லுப்பாட்டு, தூத்துக்குடி கார்த்திகேயன் குழுவினரின் கணியான் கூத்து, திருவள்ளூர் சகா குழுவினரின் சிலம்பாட்டம். பட்டுக்கோட்டை சைமன் பேண்டு இனைசக்குழுவினரின் பேண்டு இசை, கோயம்புத்தூர் சிகரம் குழுவினர் ஒயிலாட்டம், திருப்பூர் சிந்து குழுவினர் துடும்பாட்டம், புதுக்கோ ட்டை கண்ணன் குழுவினர் கிராமிய பாட்டு, திருவாரூர் சங்கரதாஸ் குழுவினர் நாடகம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க கலைகளை 400க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கு பெற்று பிரமாண்டமாக ஒரே மேடையில் நிகழ்த்தப்பட உள்ளது. இவ் விழாவினை திரளான பொதுமக்கள் கலந்துக் கொண்டு கண்டு களித்து , நம் மண்ணின் கலைகளை ஆதரித்து, கலைஞர்களுக்கு உற்சாகம் அளித்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க. கிரியப்பனவர் தெரிவித்துள்ளார்.




# புதுக்கோட்டை அருகே ஆலங்குடியில் தி.க. சார்பில் பெரியார் உலகத்திற்கு நிதியளிப்பு விழா மற்றும் பரப்புரை பொதுக் கூட்டம்!

புதுக்கோட்டை நவ.1

திருச்சி சிறுகானூரில் 100 கோடி செலவில் அமை ய உள்ள பெரியார் உலகத்திற்கு தமிழர் தலைவர் ஆசிரியர் கி வீரமணி நிதி அளிப்பு நிகழ்ச்சி அறந்தாங்கி மாவட்ட திராவிட கழகத்தின் சார்பில் பெரியார் உலகத்திற்கு நிதியளிப்பு பரப்பரை பொ துக் கூட்டம் ஆலங்குடி தனியார் திருமண மஹாலி ல் நடைபெற்றது.

பரப்பரை பொதுக்கூட்டத்திற்கு அறந்தாங்கிமாவட்டதுணைதலைவர்இளங்கோ அனைவரையும் வ ரவேற்றார் மாவட்ட தலைவர் மாரிமுத்து தலைமை தாங்கினார்.

கரிம வளங்கள் துறை அமைச்சர் ரகுபதி பிற்படுத் தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்ய நாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். திராவிட கழக துணைப் பொதுச் செயலாளர் வழக் கறிஞர் பிரின்சு என்னாரெசு பெரியார் தொடக்க உரையாற்றினார்திராவிட கழகத்தலைவர்வீரமணி சிறப்புரையாற்றினார்.

ஒருகட்சியைஆரம்பித்தவர்நிர்வாகிகளை சந்திப் பதே அதிசய சாதனை மாதிரி சொல்கிறார்கள் என் றால் இதுபோல் வேறு எங்கும் கிடையாது.

கட்சி உறுப்பினர்களை சந்தித்து விட்டு தான் முதலில் கட்சி ஆரம்பிப்பார்கள் கொள்கையை சொல் லி விட்டு தான் கட்சி ஆரம்பிப்பார்கள். கொள்கை என்னவென்று தெரியாது நிர்வாகிகள் யார் என்று தெரியாது கட்சியில் ஒரே ஒருவரை மட் டும் வைத்துக் கொண்டுள்ளனர்,

இரங்கல் சொல்ல வேண்டுமென்றால் அந்த வீட்டுக்குச் சென்று துக்க ம் விசாரிக்க வேண்டும். கேதம் விசாரிப்பது எப்படி என்பது அனைவருக்கும் தெரியும். அந்த விசாரிப்பை கூட வந்து வாங்கி விட்டு செல் லுங்கள்என்று சொல்லும்அளவிற்கு இரங்கலை டிஸ்ட்ரிபியூஷன்மாதிரிவைத்துக்கொண்டு நடத் தும் கட்சி எப்படி இருக்கும் எ\ ன்பதை மக்களிடமே விட்டுவிடு கிறோம்.

ஆலங்குடி யில் தி.க. தலைவர் கி. வீரமணி பேட்டி: புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் உள்ள தனி யார் திருமண மண்டபத்தில் பெரியார் உலகம் நிதி யளிப்பு விழா, இதுதான் ஆர்எஸ்எஸ் பிஜேபி ஆட் சி, இது தான் திராவிடம் திராவிட மாடல் ஆட்சி பரப் புரை தொடக்க விழாவில் திராவிட கழகத் தலைவர் கி வீரமணி பங்கேற்றார். மேலும் இன்று தொடங்கும் இந்த பரப் புரை பொது க்கூட்டம் தமிழ்நாடு முழுவதும் அடுத்த ஆண்டு வ ரை மூன்று மாதங்கள் தொடர்ந்து பல்வேறு மாவட் டங்களில் நடைபெற உள்ளது.

மேலும் இந்த பரப்புரை பொதுக்கூட்ட விழாவில் பெரியார் உலகம் அமைப்பதற்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டது. அப் போது திராவிடக் கழகத்தின் சார்பில் நிர் வாகி ஒருவர் ஒன்றரை லட்சம் மதிப் புள்ள தங்க செயினை திராவிடக் கழகத் தலைவர் வீரமணிக்கு நிதி உதவியாக வழங்கினார். அதேபோல்திராவிடகழகத்தின்நிர்வாகிகள் மற்றும் சிறுவர்களும் தங்களால் முடிந்த நிதியை வழங்கி னர். மேலும் இந்த பொதுக் கூட்டதொடக்கவிழாவில்கலந்துகொண்ட தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் மெய்யநாதன் பேசுகையில்:

69 சதவீத இட ஒதுக்கீடு என்பது கல்வியில் பொரு ளாதாரத்தில் எல்லா வகையிலும் நாம் உயர்ந்து இருந்தாலும் கூட இந்த இட ஒதுக்கிடை நாம் எப்படி பெற்றுள்ளோம் என்பதை நாம் உணர வேண்டும்.

அதற்காகத்தான் இந்த பிரச்சார பொதுக் கூட்டம் நடைபெறுகிறது ஆதிதிராவிட மக்களுக்கு 18 சத வீத இட ஒதுக்கீடு பழங்குடியினர் மக்களுக்கு ஒரு சதவீத இட ஒதுக்கீடு மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூ கத்திற்கு 20 சதவீத இட ஒதுக்கீடு பிற்படுத்தப்பட்ட சமூகத்திற்கு 30% இட ஒதுக்கீடு என ஒட்டு மொத்த மாக 69 சதவீத இட ஒதுக்கீடை பாதுகாப்பாக பயன் படுத்துகின்ற சமூக நீதி மாநிலம் இந்தியாவில் ஒ ரே மாநிலம் தமிழ்நாடு தான். சமூக நீதியின் அடித் தளமாக இன்றைக்கு நாம் உயர்ந்திருக்கின்றோம் என்று தெரிவித்தார்.

# விழுப்புரம் -புதுச்சேரி நெடுஞ்சாலையில் மின்விளக்குகள் அமைக்கப்பட வேண்டும் - பொதுமக்கள் கோரிக்கை!

விழுப்புரம்,நவ.1

விழுப்புரம் ரெட்டியார் மில் பஸ் ஸ்டாப்பில் இருந்து நெடுஞ்சாலையில் சென்டர் மீடியம் தடுப்பு சாலையில் அமைக்கப்பட்டு கோலியனூர் வரையும் இருக்கிறது தமிழ்நாடு அரசு விபத்து இல்லாத மாநிலம் என்று நம்மை பெருமையாய் கூறிக் கொண்டிருக்கிறோம் விபத்துக்கள் நடைபெறாதவாறு சாலையில் மின்விளக்குகள்



அமைக்கப்பட வேண்டும் விழுப்புரம் நகராட்சி மற்றும் வளவனூர் பேரூராட்சி இணைந்து இதற்கு உண்டான தீர்வை காண வேண்டும் சமூக ஆர்வலர் மற்றும் பொது மக்களின் கோரிக்கையாக உள்ளது.